Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No. 24/2023**

**2023-ம் ஆண்டு நவம்பர் மாதம் 22-ம் தேதி புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின்**

**அ.சா.6 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி)**

**திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 6 | தொழில் | - | நகராட்சி ஒப்பந்தக்காரர் |
| பெயர் | - | மணிக்குமார் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | மருதமுத்து | சமயம் | - | இந்து |
| கிராமம் | - | எம்.ஜி.ஆர் நகர், வால்பாறை | வயது | - | 44 |
| சாதி | - | - | | | |

**22-11-2023**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

**1.** நான் வால்பாறை எம்.ஜி.ஆர் நகரில் வசித்து நகராட்சி ஒப்பந்தக்காரராகப் பணியாற்றி வருகிறேன். 05.02.2023- அன்று சாய்ந்திரம் 07.00 மணிக்கு நானும் என் பக்கத்து வீட்டுக்காரர் மதனும் வீட்டுக்கு அருகில் உள்ள ரோட்டில் நடந்துபோய்க் கொண்டிருந்தோம்.

2.அப்போது எனது மனைவி திவ்யா, நந்தினி, பிரவீனா அவர்களெல்லாம் முன்னாடி உள்ள திண்ணையில் உட்கார்ந்திருந்தார்கள். சபரி நின்று கொண்டிருந்தார். நின்றுகொண்டிருந்த சபரியைப் பார்த்து ஆஜர் எதிரி வின்சன் தாயோழி என்ற கெட்ட வார்த்தையால் பேசிக்கொண்டிருந்தார்.

3.மனைவி திவ்யா, நந்தினி, பிரவீனா ஆகியோர்களை பார்த்து தேவிடியா முண்டைகளா என்று திட்டிக்கொண்டிருந்தார். சபரி பாக்கெட்டிலிருந்து பணத்தை கொடுடா, குழந்தை குட்டிகளையெல்லாம் கொன்றுவிடுவேன் என்று கூறி கல்லை எடுத்து அடிக்க வந்தார்.

4.அப்போது நாங்கள் இரண்டுபேரும் பக்கமாக இறங்கி வருவதைப் பார்த்தவுடன் கல்லை கீழே போட்டுவிட்டு ஓடிவிட்டார். அடுத்தநாள் S.I. சார் வீட்டின் அருகே வந்து என்ன நடந்தது என்று விசாரித்தார். நடந்ததை அப்படியே சொன் னேன்.

5.எதிரியின் செய்கையால் எனக்கு பயங்கர மனஉளைச்சலாக உள்ளது. இதோடு இரண்டு மூன்று கேஸ் ஆகிவிட்டது. எனக்கெல்லாம் சின்னசின்ன குழந்தைகள் உள்ளது. டெய்லி இதுமாதிரி

செய்வதால் பக்கத்தில் குடியிருக்கவே ரொம்ப பயமாக உள்ளது. சொந்த வீடு என்பதால் இருக்கிறேன். பக்கத்துவீட்டில் இருந்தவர் ஆஜர் எதிரியின் செயலால் வீட்டை காலி செய்து சென்றுவிட்டார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் போதுமான வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திரு. ரெ. செந்தில்குமார்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.